# NSW HEALTH

## COVID-19 Key Points – Friday 24 September 2021

NSW GOVERNMENT

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 84.1%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 56.6%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. 12-15 வயதுடையவர்களில், மூன்றில் ஒரு பகுதியினர், தடுப்பூசியின் முதல் மருந்தளவைப் பெற்றுள்ளனர். இது அற்புதம் ஆகும்.
- உங்களுடைய தடுப்பூசிக்கு, எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, தயவுசெய்து nsw.gov.au-இல் பதிவு செய்யுங்கள்.
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 1,043 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். மிகவும் வருந்தத்தக்க வகையில், மேலும் பதினொரு பேர் இறந்துள்ளனர்.
- இந்தக் கட்டமைப்பு முழுவதும், கடினமாக உழைத்துவரும் சுகாதார ஊழியர்களின் முழு வலையமைப்பிற்கும், அத்துடன் சமூகத்தோடு ஈடுபட்டு, ஆதரவளித்துவரும் சமூகத் தலைவர்களுக்கும் நன்றி.
- கோவிட் நோய்த்தொற்றுக்களைக் குறைக்கவும், அத்துடன் ஏராளமான மக்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதைத் தடுக்கவும், நாம் தொடர்ந்தும் எச்சரிக்கையுடனும், பொறுப்புடனும் செயற்படுவது உண்மையில் மிக முக்கியம் ஆகும்.
- லைட்னிங் ரிட்ஜ் (Lightning Ridge), ஜிண்டாபைன் க்ரூக்வெல் (Jindabyne Crookwell) மற்றும் தெற்கு லிஸ்மோர் (South Lismore) பகுதிகளில், கழிவுநீரில் நோய்த்தொற்றுக்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளமை குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். சிறு நோயறிகுறிகள் இருந்தாலும்கூட, தயவுசெய்து முன் வந்து பரிசோதனையைச் செய்வித்துக்கொள்ளுங்கள்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதுதான், இந்த நோய்த்தொற்றுப் பரவலில் இருந்து விடுபடுவதற்கான எமது வழி ஆகும். இது பாதுகாப்பானது மற்றும் செயற்திறன் மிக்கது. உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், உங்களுடன் பணியாற்றுபவர்களையும், உங்கள் நண்பர்களையும், நீங்கள் தொடர்புகொள்ளும் அனைவரையும் இது பாதுகாக்கும்.